
இலவச காலாண்டு சமய இதழ்



# அகர தீபம்

www.akaram.eu

14.10.2021 - 13.01.2022




மாலை : 06 மலர் : 04

திருவள்ளுவர் ஆண்டு 2051

# நுழைவாயில்..

**அகரதீபம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் வணக்கம்.**

உலக மனித இனங்களை உயிர் அச்சத்தில் கொண்டு சென்ற கொரோனா உலகப் பெருந் தொற்று நோய், கடந்த இரண்டு ஆண்டுகளாக நம்மை ஆட்டிப் படைக்கிறது. விஞ்ஞானிகள் எத்தனை தடை மருத்துவங்களைக் கண்டு பிடித்தாலும் நிரந்தரத் தீர்வு ஒன்றை எட்ட முடியாமல் தவிக்கிறார்கள்.

கண்டுபிடித்த தடுப்பூசி மருந்துகளால் கிருமித் தொற்றை தடுக்கவோ, அகால மரணங்களைத் தவிர்க்கவோ முடியாத அவலம் தொடருகிறது. புதுப்புது மருந்துகள், புதுப் புது கிருமி ரகங்களை உருவாக்கி வருவதால் நோய்த் தொற்றின் சங்கிலித் தொடரின் வேகம் தடையின்றித் தொடருகிறது. விஞ்ஞானம் தோற்று விட்ட நிலையில் மெஞ்ஞானம்தான் எமக்குள்ள ஒரே தெரிவாக உள்ளது.



எனவே, அகர தீபத்தின் பணி பன்மடங்காகப் பெருகி உள்ளது. இலங்கை, இந்தியா போன்ற தேசங்களில் ஆயுர்வேதம், சித்த வைத்தியம், மத சம்பிரதாயங்கள் நமக்கு மேலதிக வழிகளாக நம்பிக்கை இழக்காமல் வாழ்வை எதிர் கொள்ள உதவுகின்றன.

புலம்பெயர் தேசங்களில் நிலைமை அவ்வாறில்லை. எனவே முகக் கவசம், தொற்று நீக்கி திரவங்கள், தடுப்பூசி மருந்துகளை மட்டுமே நம்பி வாழ வேண்டிய கட்டாயம் உள்ளது. அவை யாவும் நூற்றுக்கு நூறு நம்பகமானவை அல்ல என்பதை ஆய்வுகளே சொல்கின்றன. இருப்பினும் நம்பிக்கைதான் பலரைக் காப்பாற்றி வருகிறது.

எனவே, விஞ்ஞானத்தை விட மெஞ்ஞானத்திலே நாம் அதிக கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். விஞ்ஞானத்தின் பயன்பாடு திருப்தியாக இல்லாத நிலையிலும், அதை நம்புவதைப் போன்றே சிலருக்கு மெஞ்ஞானத்தின் மீது நம்மில் ஒரு சிலராவது தமது விருப்பத்துக்கு மாறாக நம்ப வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

அவர்களாவது அறிவோம் ஆன்மீகம் தொடரை அக்கறையோடு படித்தால், மிகப் பெரும் ஆனந்தத்தையும், ஆன்மீக ஈடேற்றத்தையும் பெற முடியும் என்கிற நம்பிக்கை பெறுவர் எனக் கூறி மீண்டும் சந்திப்போம் என விடை பெறும்,

**ஆசிரியர், அகர தீபம்.**



# விளக்கு எரிந்த வீடு வீணாய் போகாது

"விளக்கு எரிந்த வீடு வீணாய் போகாது" என்று ஒரு பழமொழி உள்ளது. தீபத்தின் சுடருக்கு தன்னை சுற்றி உள்ள தேவையற்ற கதிர்களை (நெகடிவ் எனர்ஜி) ஈர்க்கும் சக்தி உண்டு. அவ்வாறு ஈர்க்கும்போது நம்மை சுற்றி நேர்மறை ஆற்றல் (பாசிடிவ் எனர்ஜி) அதிகரிக்கும்.

நம் சுற்றுப்புறம் தெளிவாகவும் பலத்தோடும் காணப்படும். இரண்டு நாள் வீட்டில் விளக்கேற்றாமல் இருந்தால் வீடே மயானம் போல் தோன்றும். எல்லோருமே சோர்வாக இருப்பார்கள். இதுவே விளக்கேற்றுவதன் தத்துவம்.

நம் உடலில் இருக்கும் ஏழு சக்கரங்களில் மூலாதாரமும், சுவாதிசுடானமும் நல்லெண்ணெய் விளக்கு ஏற்றுவதால் தூய்மையடைகிறது. அதேபோல மணிபூரகம், அனாகதம் இரண்டும் நெய்விளக்கு ஏற்ற தூய்மை அடைந்து நற்பலன்களை அடைகிறது.

நம் உடலில் இருக்கும் நாடிகளில் சூரியநாடி, சந்திர நாடி, சுசம்னா நாடி ஆகியவை மிக முக்கியமாக கருதப்படுகிறது. சூரியநாடி, நல்ல சக்தியையும் வெப்பத்தையும் தருகிறது. சந்திரநாடி குளுமையை தருகிறது.

சுசம்னா நாடி அந்த பரம்பொருளுடன் சம்பந்தப்பட்டு ஆன்மிக பாதையை வகுக்கிறது. நல்லெண்ணெய் விளக்கு ஏற்ற சூரியநாடி சுறுசுறுப்படைகிறது.

நெய் விளக்கு சுசம்னா நாடியை தூண்டிவிட உதவுகிறது. பொதுவாக நெய்தீபம் சகலவித சுகங்களையும் வீட்டிற்கு நலன்களையும் தருகிறது.

திருவிளக்கு எப்போது வேண்டுமானாலும் ஏற்றலாம். இதற்கு தடையேதும் இல்லை. ஆனால் பொதுவாக மாலை 6.30க்கு ஏற்றுவதே நமது மரபு. இதை




அகர தீபம்

மாலை : 06 மலர் : 04

தலைமை
த. இரவீந்திரன்

ஆசிரியர்
ஆதவன்

உதவி ஆசிரியர்
வண்னை தெய்வம்

ஆசிரியர் குழு
வியாசன்

வடிவமைப்பு
ஈழமயூரன்

ஒப்பு நோக்குனர்
திரு.செ. அமுதவாணன்



தொடர்புகளுக்கு

European Tamils Union e.V.
PO.Box 4153, 59037 Hamm
Germany

00 49 176 47 11 87 11

Email : akaratheepam@akaram.eu

www.akaram.eu



Germany, Switzerland, France
England, Denmark, Norway,
Holland, Sweden, Italy, Canada


© ETU e.V.2014 All rights reserved

# தேவ இரகசியம்



ஒரு தாய் அப்போதுதான் ஒரு குழந்தையைப் பிரசவித்திருந்தாள். அந்தக் குழந்தையின் தந்தை ஒரு வாரத்துக்கு முன்னால்தான் இறந்து போனான்.

எமதர்மன் ஒரு எமதூதனை அனுப்பி "அந்த அம்மாவுடைய உயிரை எடுத்துக் கொண்டு வந்துவிடு" என்றான்.

இந்த எமதூதன் "ஐயோ பாவம். அப்பாவும் இல்லை, அம்மாவையும் நான் எடுத்துக் கொண்டு போய்விட்டால் இந்தக் குழந்தைக்கு யார் கதி" என்று தாயின் உயிரைக் கவராமல் திரும்பி விட்டான்.

நீங்களெல்லாம் அந்த நிலையில்தான் இருக்கிறீர்கள். உங்களுக்கு என்று ஒரு எண்ணங்களை, அளவு கோல்களை வைத்திருக்கிறீர்கள்.

எமதூதன் அந்த குழந்தைக்கு வேறு யார் கதி என்று நினைத்து பரிதாபப் பட்டதனால் உயிரை எடுக்காமல் போய் விட்டான்.

ஆனால், எமராஜாவோ, "இதோ பார். உனக்கு தேவலோக ரகசியங்கள் தெரியவில்லை. கடவுளுடைய அருளாட்சி எப்படி நடக்கிறது என்பதும் உனக்குத் தெரியவில்லை. அது தெரிகிற வரைக்கும் நீ பூமியில் போய் கிட" என்று கூறி அவனைத் தூக்கி பூமியில் போட்டு விட்டார்.

அவன் கன்னங்கரேலென்ற உருவில் ஒரு பூங்காவில் முனகிக் கொண்டு கிடக்க, அந்த வழியாக வருகிற ஒரு தையற்காரன், "என்ன இது, இங்கே முனகல் சத்தம் கேட்கிறதே" என்று அவனைப் பார்த்து பரிதாபப்பட்டு, இவனிடம் இருந்த துணியை அவனுக்குப் போர்த்தி "என்னுடன் வா" என அழைத்தான்.

எமதூதன் ஒரு வார்த்தை கூட பேசாமல் தையற்காரனுடன் அவன்

வீட்டுக்குச் சென்றான். திண்ணையில் எமதூதனும், அந்த தையற்காரனும் படுத்துக் கொண்டார்கள்.

அந்த தையற்காரனின் மனைவி தையற்காரனை மட்டும், “வா வா வந்து கொட்டிக்கோ” என்று சாப்பிடக் கூப்பிட, அவன் “விருந்தாளி வந்திருக்கிறானே” என்று சொல்ல, அவளோ தன் கணவனை திட்டினாள். “விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று” என்று மனதுக்குள் எண்ணிய எமதூதன் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருந்தான்.

ஒரு பத்து நிமிடம் கழித்து அவள் “சரி சரி வா” என எமதூதனை சாப்பிட வரச்சொல்லிக் கூப்பிடுவதைக் கண்டு அவன் லேசாக சிரித்ததும். கன்னங்கரேலென்று இருந்த அவன் உடம்பு கொஞ்சம் பொன்னிறமாக மாறியது.

தையற்காரன் அவனிடம், “எனக்கு காஜா போட, பட்டன் தைக்க உதவிக்கு ஆளில்லை. உனக்கு தங்க இடம் தந்து, சாப்பாடு போடுகிறேன். எங்கள் வீட்டில் இருந்து கொள்” என்று சொன்னான்.!! அதன்படியே எமதூதன் தையல் உதவியாளன் ஆகிவிட்டான்.

அப்படியே பத்து வருடங்கள் கடந்து போனது.

ஒரு குதிரை வண்டியில் ஒரு பணக்காரப் பெண்மணி, கை கொஞ்சம் முடமாக இருக்கிற குழந்தை, அத்துடன் ஒரு நல்ல ஆரோக்கியமான குழந்தை என இரண்டு பேரையும் கூட்டிக் கொண்டு வந்து தையற்காரனிடம், “இந்தக் குழந்தைக்கு நல்லா தளர்வாக தைக்க வேண்டும். கை கொஞ்சம் சரி இல்லாமல் இருக்கிறது” என்று சொன்னாள்.

எமதூதன் அந்த குழந்தையையும், பணக்கார பெண்மணியையும் பார்த்து சிரித்ததும் அவன் உடம்பு இன்னும் கொஞ்சம் பொன்னிறமாக மாறியது.

இன்னும் ஐந்து வருடம் கடந்து சென்றது.

ஒருநாள் ஓர் பெரிய பணக்காரன் சொகுசு காரில் வந்து “இதில் பத்து மீட்டர் துணி இருக்கிறது. 20 வருடம் தாக்குப் பிடிக்கிற மாதிரி சூப்பராக சபாரி சூட் தைத்து வை” என்று சொல்லி விட்டுப் போனான்.

அதற்குள் நம் எமதூதன் கை தேர்ந்த தையற்காரனாக மாறிவிட்டான். ஆனால், அவன் பணக்காரன் ஆர்டர் கொடுத்து விட்டுப் போன கோட்டு சூட்டை தைக்காமல் இருந்தான். முதல் நாள் போய், இரண்டாவது நாளும் கடந்து போய்விட்டது.

தையற்காரன், “நாளைக்கு தருவதாக ஒப்புக் கொண்டிருந்தோமல்லவா? அந்த பணக்காரன் வந்து கேட்டால் அவனுக்கு நாம் என்ன சொல்வது?” என்று கேட்டதும், இவன் டர்ரென்று அந்த பேண்ட் துணியைக் கிழித்து அதில் ஒரு தலையணை உறை, பெட்கவர் தைப்பதைக் கண்ட தையற்காரன் அவனிடம், “நீ என் பிழைப்பில் மண்ணை அள்ளிப் போடுவதற்கு வந்தாயா? இப்போது அவன் இங்கே வந்து நான் ஆர்டர் கொடுத்த கோட்டும் சூட்டும் எங்கே? என்று கேட்டால் நான் என்ன பண்ணுவது?” என்றான்.

அப்போது கார் டிரைவர் பரபரப்புடன் ஓடி வந்து, “நீங்கள் சபாரி தைக்காதீர்கள். முதலாளி இறந்து விட்டார். அதனால் அவருக்கு ஒரு தலையணை உறையும், மெத்தை உறையும் தைத்து விடுங்கள்” என்று சொன்னான்.

அதைக் கேட்டதும், இவன் முகத்தில் சிரிப்பு வர, அவன் முழுவதும்

பொன்னிறமாக மாறி அவன் மெதுவாக உயர்ந்து மேலே போகத் தொடங்கினான்.

அந்தத் தையற்காரன், "அப்பா நீ யார்? உன் வாழ்க்கையில் இதுவரைக்கும் மூன்று முறை தான் சிரித்தாய். நீ ஒவ்வொரு முறை சிரித்த போதும் உன் உடம்பு பொன்னிறமாக மாறியது. அதனால் அதற்கு விளக்கத்தை சொல்லிவிட்டு, நீ போ" என்றான்.

அவன் "நான் எமனுடைய தூதுவன். ஒரு தாய் இறந்து போனால், அந்தக் குழந்தைக்கு யார் கதி? என்று பரிதாப்பட்டு அந்தத் தாயின் உயிரை எடுக்காமல் விட்டதனால், பூமியில் போய் தேவ ரகசியத்தைத் தெரிந்து கொண்டு வா" என்று எமதர்மன் என்னை இங்கே அனுப்பினார். அதனால் தான் பூமிக்கு வந்தேன். இப்போது தெரிந்து கொண்டு விட்டேன். நான் திரும்ப எனது பணிக்கு சேரப் போகிறேன்" என்றான்.

"நீ என்ன தெரிந்து கொண்டாய்? எனக்கும் சொல்லிவிட்டுப் போயேன்" என்று இவன் கேட்டான்.

முதல் நாள் உன் மனைவி என்னை அடிக்க வந்தாள் அல்லவா? அப்போது அவள் முகத்தில் தரித்திர தேவி தெரிந்தது. பத்தாவது நிமிடம் என்னை சாப்பிட வா என்று கூப்பிடும் போது அந்த முகத்தில் அன்னை மகாலட்சுமி தெரிந்தார். அப்போது, இந்த உலகத்தில் "ஒருவன் பணக்காரன் ஆக இருப்பதற்கும் ஏழையாக இருப்பதற்கும் அவனுடைய எண்ணங்கள் தான் காரணம்" என்று தெரிந்து கொண்டேன். இது போய், அது வருவதற்கு பத்து நிமிடங்கள் தான் தேவை என்றும் தெரிந்து கொண்டேன். இதுதான் தேவரகசியம் ஒன்று!

மனிதர்களிடமே பெரிய திட்டங்கள் எல்லாம் இருக்கிறது. ஆனால் எந்த கார்டை வைத்து விளையாடுவது என்று தெரியாததினால் வம்பில் மாட்டிக் கொள்கிறார்கள்.

"பத்து வருடம் கழித்து ஒரு பணக்கார பெண்மணி குதிரை வண்டியில் வந்தாள் அல்லவா? அவளுடன் ஒரு குழந்தை கை முடமாக வந்தது அல்லவா? அதுதான் நான் இதன் அம்மா இறந்து விட்டால் யார் பார்த்துக் கொள்வார்கள் என்று நினைத்த குழந்தை. நிஜமான தாய் ஏழை.

அவள் இறந்து விட்டால் கூட இந்த குழந்தையை நன்றாக பார்த்துக் கொள்வதற்கு, இதற்கு கொஞ்சம் தளர்வாக தைக்கவேண்டும் என்று சொல்கிற அளவிற்கு ஒரு பணக்கார அன்பான அம்மாவை இறைவன் தயாராக வைத்திருக்கிறான். இது எனக்கு தெரிந்த போது இரண்டாவது முறை சிரித்தேன். ஒரு எமதூதன் ஆகிய எனக்கே பச்சாதாபம் இருக்கிறபோது, இறைவனுக்கு இருக்காதா? அவன் அதற்கு ஒரு மாற்று வழி வைத்துக் கொண்டுதான் அந்த உயிரை எடுப்பான். இது எனக்கு தெரிந்தபோது இரண்டாவது தேவ ரகசியம் புரிந்தது.

கடவுள் எல்லாம் காரண காரியங்களோடு நடத்துகிறான்.

"மூன்று நாட்களில் சாகப் போகிறவன் இன்னும் 20 வருடம் நான் உயிரோடு இருக்கப் போகிறேன் என்று நினைத்துக் கொண்டு, நன்றாக 20 வருடத்திற்கு வருகிற மாதிரி துணி தை என்று சொன்னானே! எனக்குத் தெரியும் அவன் சாகப்போகிறான் என்று. அதனால்தான் நான் துணி தைக்கவே இல்லை. அவன் இறந்த அந்த நேரத்தில் துணியைக் கிழித்து தலையணை உறையும், மெத்தை உறையும் தைத்தேன்".

இந்த ஜனங்கள் இந்த உலகத்தில் ஏதோ நூறு வருடம், இருநூறு வருடம் பட்டா போட்டுக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டு குழம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

சாவு எப்போது வேண்டுமானாலும் வரலாம்.!! நேற்று இருந்தவன் இன்று இல்லை. அதுதான் இந்தக் கலியுகத்தின் எதார்த்தமான உண்மை! அது தெரியாமல் ஒவ்வொருவனும் நான் மட்டும் ரொம்ப வருடம் இருப்பேன் என்றும், மற்றவன்தான் செத்துக் கொண்டிருக்கிறான் என்றும் நினைக்கிறான் அல்லவா? அதுதான் மூன்றாவது ரகசியம்!!

அதனால்தான் இந்த உலகத்தில் மனிதன் திறமையாகச் செயலாற்ற முடியாமல் இன்னும் 20 வருடம் கழித்து நடக்கப் போகிற குழந்தையுடைய கல்யாணத்திற்கு இன்றைக்கு காசு இல்லையே என்று வருத்தப்படுகிறான்! அதுபோலவே இன்னும் 15 வருடம் கழித்து கல்லூரியில் படிக்கப் போகிற பையனுக்கு பணம் இல்லையே என்று இப்போதே வருத்தப்பட்டு கொண்டு இருக்கிறான்! அதனால்தான் உலகத்தில் நிம்மதி இல்லாமல் இருக்கிறது. பேசிக் கொண்டிருக்கிறபோது இப்போதே செத்துப் போவோம், என்று நினைத்தால், நீ சந்தோசமாக இருப்பாய்!

சுருக்கமாக இந்த மூன்று ரகசியங்கள் இவை தான்..

முதலாவது ஏழையாக இருப்பதும், பணக்காரன் ஆக இருப்பதும் நம்முடைய எண்ணங்களால் நடக்கிறது.

இரண்டாவது எது நடந்ததோ அதற்கு கடவுள் ஒரு மாற்றுவழி வைத்திருப்பார். மனிதனின் மனநிலையில் உள்ள ஈகோவினாலும், அறியாமையினாலும் அவர்களால் அதைப் புரிந்து கொள்ள முடிவதில்லை.

மூன்றாவது எந்த நேரத்திலும் சாவு வரலாம். இது தெரியாமல் மனிதர்கள் கொட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அஞ்ஞானம் தான் உலகில் உள்ள துக்கங்களுக்கு எல்லாம் காரணம்.

இவைதான் அந்த மூன்று தேவரகசியங்கள். என்று சொல்லிவிட்டு விடைபெற்றான் அந்த எமதூதன். எனவே, நாமும் இந்த தேவ ரகசியங்களை புரிந்து கொண்டு வாழப் பழகி விட்டால், நம் உடலில் உயிர் இருக்கும் வரை நிம்மதியாக வாழலாம்!

உலக வாழ்வில் தான் தேவர்களுக்கும் தேவையான ரகசியங்கள் பொதிந்து கிடக்கின்றன என்பதை இந்தக் கதையின் மூலம் அறியலாம்....

**ஓம் சிவாய நமஹ...**
**சிவ சிவாய நமஹ.....**

# இறைவனின் விருப்பம்

ஆசிரமம் ஒன்றில் சீடன் ஒருவன் மௌனமாக இறைவனை வழிபட்டுக் கொண்டிருந்தான். இரவு நேரம் என்பதால் தவளைகளும், பூச்சிகளும் கத்தத் தொடங்கின. அது சீடனுக்குத் தொல்லையாக இருந்தது. வழிபாட்டில் இருந்து எழுந்து, 'இது என்ன சோதனை...? இவை எல்லாம் கத்தாமல் இருக்காதா?' என குருவிடம் கேட்டான்.

'நீ ஏன் அவை கத்துவதாக நினைக்கிறாய்? அவற்றின் மொழியில் அவை இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கலாம் அல்லவா? இறைவனே உயிர்களின் ஓசையை விரும்புவதால்தானே இவற்றை கத்த வைத்திருக்கிறான்... இதைபோய் இடைஞ்சல் என்கிறாயே...?' அமைதியாக சொன்னார் குரு.



# அசோக வனத்தில் சீதை

## (சீதா எலியா)

இராமாயணத்தில் சீதா தேவி சிறை வைக்கப்பட்ட இடத்தில் அமைக்கப் பட்டுள்ள சீதா அம்மன் கோயில், சீதா எலியா குறித்து இங்கு விரிவாக பார்ப்போம்...

இராமாயணத்தின் மிக முக்கிய நோக்கமே கடவுளே அவதாரமாக தோன்றி, எந்த ஒரு சவாலான சூழலிலும் அற நெறிகளைப் பின்பற்றி, இந்த மானுட சமூகம் அறத்தை எப்படி கடைப்பிடிக்க வேண்டும் என்பதை உணர்த்துவதற்காக அமைந்த ஒரு அற்புத காவியம். இந்து தர்மத்தில் இராமாயணம், மகாபாரதம் என இரு காவியங்கள் இருந்தாலும், இதை எல்லாம் செய்தால் அறத்தின் படி வாழலாம் என இராமாயணமும், இவற்றை எல்லாம் செய்யாமல் இருந்தால் அறத்தை கடைப்பிடித்து வாழமுடியும் என உணர்த்துவதாக உள்ளது.

இதனால் தான் அறிஞர்கள் இராமாயணத்தை விட மிக சுவையான நிகழ்வுகள் அடங்கிய மகாபாரதத்தை விட, அற வழியை மட்டும் போதிக்கும் இராமாயணம் சிறந்ததாகக் கருதுகின்றனர்.

இராமாயணத்தில் இராமன், சீதை, இலட்சுமணன் ஆகியோர் காட்டுக்குச் சென்ற போது, சீதையை இராவணன் கவர்ந்து, இலங்கையில் உள்ள அசோக வனத்தில் சிறைபிடித்து வைத்ததாக கூறப்படுகிறது. அந்த அசோக வனம் இப்போது எப்படி இருக்கிறது?. அதன் இயற்கை அழகு எப்படி இருக்கின்றது என்பதை இந்த பதிவில் பார்ப்போம்.

இராவணனால் சிறைபிடிக்கப் பட்ட சீதா பிராட்டி, அசோக வனத்தில் வைக்கப்பட்டிருந்தார். சீதா தேவி இருந்த அந்த இடம் தற்போது 'சீதா எலியா' என அழைக்கப்படுகிறது. இராமாயணத்தில் அசோக வனம் (காடு) என அழைக்கப்பட்ட நிலையில், இன்றும் இந்த சீதா எலியா பகுதி மலை, காடு சூழ இயற்கை எழில் ததும்பக் கூடிய இடமாக காட்சி அளிக்கின்றது. இங்கு சீதா தேவி மூலவராக அமைந்த ஒரு கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கோயிலுக்கு பின் மலைக் காடு பகுதி அசோகவனம் என அழைக்கப்படுகிறது.

இங்கு சிறை வைக்கப்பட்டிருந்த சீதா தேவி, மலைக்கு கீழே ஓடையில் வந்து நீராடினார் என நம்பப்படுகிறது.

சீதை அம்மன் கோவில் அமைந்துள்ள இடம் இலங்கையின் மலையகத்தில் சீதாதேவிக்காக சீதை அம்மன் கோவில் அமைந்துள்ளது. இது நுவரெலியா மாவட்டத்திலிருந்து 5 கிமீ தொலைவிலும், சுக்கலை தாவரவியல் பூங்காவிலிருந்து 1கிமீ தொலைவிலும் இந்த ‘சீதா எலியா’ என்ற இடம் அமைந்துள்ளது.

இந்த பகுதியில் காணப்படும் பல வட்டமான தடங்கள், இராவணனின் யானையின் கால்தடம் என கூறப்படுகிறது. சீதா தேவியைப் பார்க்க யானையில் இராவணன் வந்ததாக தெரிகிறது.

இராமாயணம் கதை இலங்கையில் நடந்ததை காட்டும் பல தடங்கள் உணர்த்தும் வகையில் உள்ளது. இராவணன் எல்ல, இராவணன் வெட்டு உள்ளிட்ட வரிசையில் இந்த சீதா எலியாவும் அமைந்துள்ளது.

அங்கு உள்ள பாறைகளில் சில கால் தடங்கள் காணப்படுகின்றது. அது அன்னை சீதாவை சந்தித்து, இராமபிரான் கொடுத்து அனுப்பிய மோதிரத்தைக்





காட்டி, நான் உங்களின் சேவகன், உங்களை விரைவில் மீட்க இராமன் வருவார் என கூறி சென்றதாகக் கூறப்படுகிறது. அப்படி அசோக வனத்திற்கு வந்த அனுமனின் கால் தடம் தான் இந்த கோயிலுக்கு அருகில் உள்ள பாறையில் இருக்கும் கால் தடம் என நம்பப்படுகிறது.

இதை உணர்த்தும் வகையில் சீதா தேவியை அனுமன் வணங்குவது போல சிலையும் இங்கு வைக்கப்பட்டு, அதன் குறிப்பு எழுதி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மத்திய மாகாணமான நுவரெலியாவில், சீதா எலியாவில் அமைந்துள்ள சீதை அம்மன் கோயிலில் சீதா பிராட்டி மூலவராக அமர்ந்துள்ளார். அதாவது உலகிலேயே சீதையை பிரதானமாக வைத்து கட்டப்பட்ட கோயில் இது மட்டும் தான் உள்ளது. இந்த கோயிலில் ஒரு மரம் இருக்கின்றது. இங்கு வரும் பக்தர்கள் தங்களின் வேண்டுதலை வைத்து ஒரு துணியில் காசுகளைக் கட்டி வைத்து வணங்கி செல்கின்றனர். இப்படி செய்வதால் அவர்களின் வேண்டுதல் நிறைவேறுவதாக கூறுகின்றனர்.

# கருணையுள்ள கண்ணன்

அபிமன்யுவின் மனைவி உத்தரைக்கு முனிவர் ஒருவர், மாயக்கண்ணாடி ஒன்றைப் பரிசாக வழங்கினார். அந்தக் கண்ணாடி முன் ஒருவர் வந்து நின்றால், அவர் மனதில் யார் இருக்கிறாரோ, அவர் அதில் தெரிவார். உத்தரையே முதலில் அதை சோதனை செய்தாள். திருமணமானதில் இருந்து, அவளது அன்புக் கணவன் அபிமன்யுவைத் தவிர, அவளது உள்ளத்தில் வேறு யாருமில்லை. எனவே, அபிமன்யு கண்ணாடியில் தெரிந்தான்.

அபிமன்யுவும், மனைவி மீது தீராக்காதல் கொண்டிருந்தான். அவனைக் கண்ணாடி முன்னால் நிறுத்தினர். அப்போது, உத்தரை அதில் தெரிந்தாள். அந்த சமயத்தில் மாயக்கண்ணன் அங்கு வந்தார். அவர் மனசுக்குள் யார் இருக்கிறார் என்று பார்க்க எல்லாருக்கும் ஆசை.

அர்யுனன் என்னை விட்டால் யார் இருப்பார்? எனச் சொல்ல, போடா! அவன் மனதில் நான் தான் இருப்பேன் என பீமன் வம்புக்குப் போக, இருவருமே இல்லை! நான் தான் இருப்பேன் என தர்மர் பிடிவாதமாய் சொல்ல, ஏன்... அவனது தந்தை வசுதேவனின் தங்கையான நானல்லவா இருப்பேன் என மனதுக்குள் நினைத்துக் கொண்டாளாம் குந்தி. எல்லாரும் ஆர்வமாயினர்.

கண்ணனைக் கையைப் பிடித்து இழுக்காத குறையாகக் கண்ணாடி முன் கொண்டு வந்து நிறுத்தினர். என்ன ஆச்சரியம்! யாருக்கு கண்ணனை அறவே பிடிக்காதோ, யாரொருவன் கண்ணனைக் கொல்ல திட்டமிட்டிருக்கிறானோ அந்த சகுனி கண்ணாடியில் தெரிந்தான். கண்ணா! மாயம் செய்கிறாயா? என அனைவரும் ஒரே நேரத்தில் கேட்டனர். இல்லை..இல்லை... என்னைக் கொன்றே தீர வேண்டுமென தூக்கத்தில் கூட என்னையே சிந்தித்துக் கொண்டிருக்கிறான் சகுனி. என்னை எப்படி எண்ணுகிறார்கள் என்பது முக்கியமல்ல! கணநேரமும் என்னை மறவாதவர்கள் என் இதயத்தில் இருப்பவர்கள் என்றான் கருணையுள்ள கண்ணன்.



# திருமணப் பந்தலில் வாழை மரம் கட்டுவது ஏன்?

திருமணப் பந்தலில் மட்டுமல்லாது, சுப காரியங்கள் நடக்கும் அனைத்து இடங்களிலும் வாழை மரம் கட்டுவது நம்பிக்கை. முக்கனிகளுள் ஒன்றான வாழை எல்லா காலங்களிலும் கிடைக்கும் கனி.

மற்ற இரண்டு கனிகளின் மரங்களை விட, வாழை மரம் அதிக பயன்தரக்கூடியது. வாழை, தன்னை அழித்துக் கொண்டு, பிறருக்கு கனி தரும். இதுபோல் தம்பதியர் ஒருவருக்கொருவர் தங்கள் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும் என்பதன் அடையாளமாக வாழை மரம் உள்ளது.

குடும்ப விருத்திக்காகவும் வாழை மரத்தை கட்டுவதுண்டு. வாழையின் இலை, காய், பூ, பட்டை, தண்டு, நார் என அனைத்தும் பயன்தரக்கூடியது. சில பகுதிகள் மருந்தாகவும் பயன்தரக் கூடியது. ஏனைய மரங்களில் இருந்து ஒரு வகையில் வாழை வித்தியாசமானது. ஒரு வாழையை நட்டால் போதும் 'வாழையடி வாழையாக' அதன் குலம் தளைக்கும்.

மனிதன் தலைமை பெறவேண்டும், தன்னைச் சார்ந்திருப்பவர்களுக்கு பலவகைகளிலும் பயன்தரவேண்டும் என்றும், அவன் குலம் வழி வழியாக தழைக்கவும் என்பதை உணர்த்துவதற்காகத்தான் சுபகாரியப் பந்தலில் வாழை மரம் கட்டுகின்றனர்.

மணமக்களை 'ஆல் போல தழைத்து அருகு போல் வேரோட வேண்டும்' என்று வாழ்த்தும் நெஞ்சத்தின் புலப்பாடகத்தான் வாழைமரம் கட்டுவதைக் கருத வேண்டும்.

## இதுவல்லவோ உயர்ந்த செயல்



துறவி ஒருவரை விருந்துக்கு அழைத்த இல்லறவாசி ஒருவன், தன் மனைவி உண்பதையும், உறங்குவதையும் தவிர வேறு எதையும் சிறப்பாகச் செய்வதில்லை என்று குறையாகச் சொன்னான்.

அவன் மனைவியை அழைத்த துறவி விவரத்தைக் கேட்டார்.

"அய்யா... நான் துன்பத்தையோ, துக்கத்தையோ பெரிதாக நினைப்பதில்லை. இருப்பதை விடுத்து இல்லாததற்கு ஆசைப்படுவதில்லை. அதனால் என்னால் நிம்மதியாக உறங்கவும், இருப்பதையே நிறைவாக உண்ணவும் முடிகிறது. இது தவறா?" அவள் சொல்ல, துறவி எதுவும் சொல்லாமலேயே தன் மனைவியின் உயர்வு அவனுக்கு புரிந்தது.

# அனுமன் பிறந்த கதை!

ராமாவதாரம் நிகழ இருந்த வேளையில், அவருக்குச் சேவை செய்ய பறவைகள், விலங்கினங்களெல்லாம் முன் வந்தன. பரமேசுரவரனுக்கும் அந்த அவதாரத்துக்குச் சேவை செய்யும் எண்ணம் ஏற்பட்டது. தன் விருப்பத்தை அவர் தேவியிடம் தெரிவித்தார். வானரப் பிள்ளை ஒன்றைப் பெற்றுத்தர கேட்டார்.

தனக்கு அழகான இரண்டு குழந்தைகள் இருக்க, வானரப்பிள்ளை தேவையில்லை என அவள் மறுத்து விட்டாள். எனவே, ருத்ராம்சமான தன் சக்தி உலகத்தில் எத்தனையோ குழந்தை இல்லாத தாய்மார்களில் ஒருத்திக்கு கிடைக்கட்டுமே என நினைத்தார் பரமேஸ்வரன். தன் சக்தியை எடுத்துச் செல்லும் படி வாயு பகவானுக்கு உத்தரவிட்டார்.

‘புஞ்யிகசுதலை’ என்ற தேவலோக அப்சரசசு பூலோகம் வந்தாள். ஒரு காட்டில் தவம் செய்து கொண்டிருந்த ரிசியின் உருவத்தை கேலி செய்தாள்.



“ஏ பெண்ணே! உருவத்தைப் பார்த்து எள்ளி நகையாடிய நீ, குரங்காய் போ” என சாபமிட்டார்.

புஞ்யிகசுதலையின் முகம் வானர முகமாகி விட்டது. அவள் அழுது புலம்பினாள். சாப விமோசனம் கேட்டாள்.

அவளது கண்ணீர் கண்டு கலங்கிய ரிசி, “பெண்ணே! நீ நினைத்த நேரத்தில், நினைத்த உருவம் எடுக்கும் சக்தியைத் தருகிறேன்” என்ற வரம் அளித்தார்.

அந்தப்பெண் ஒரு பிறவியில், கேசரி என்ற வானரனுக்கு வாழ்க்கைப் பட்டாள். அந்தப் பிறவியில் அவளுக்கு ‘அஞ்யனை’ என்ற பெயர். ‘கேசரி’ என்றால் ‘சிங்கம்’. ‘அஞ்யனை’ என்றால் ‘மை பூசிய பேரழகி’.

ஒருநாள், அப்சரசாக உருமாறி ஒரு மலைச் சிகரத்தில் உலவிக் கொண்டிருந்தாள். அப்போது தான் வாயு பகவான் அவளைப் பார்த்தான். அவளது அழகில் மயங்கி தழுவிக் கொண்டார். தன்னை அணைப்பதை உணர்ந்த அவள், அணைப்பது யார் என தெரியாமல் “ஒரு



பெண்ணிடம் இப்படியா தவறாக நடப்பது?" என கதறினாள்.

அப்போது வாயுபகவான் காட்சியளித்து "பெண்ணே! தவறான நோக்கத்துடன் உன்னை நான் தழுவவில்லை. மனதால் மட்டுமே!. ஒரு பெண்ணுக்குத் திருமணம் நடக்கும் முன் அவர்கள் தேவர்களுக்கு சொந்தமாகிறார்கள் என்பதை நீ அறிந்திருக்கத்தானே செய்கிறாய். நானும் ஒரு தேவன் என்பதால், உன் கற்புக்கேதும் களங்கம் ஏற்படவில்லை. நீ உலகம் புகழும் ஒரு புத்திரனைப் பெறுவாய்" எனச் சொல்லி மறைந்தார்.

அஞ்யனை கர்ப்பமானாள். மார்கழி மூல நட்சத்திரத்தில் அழகான ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தாள். வாயுமைந்தன் பூமிக்கு வந்தவுடனேயே வானில் பறந்தான். அழகில் சிறந்த அவனுக்கு 'மாருதி' என்று பெயர் சூட்டினாள் அஞ்யனை.

## சாதம் பிரசாதம் ஆகட்டும்!



உணவை நல்லமுறையில் சமைப்பது எந்த அளவுக்கு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் அவ்வுணவு தூய்மையான மனதுடன் செய்ய வேண்டும் என்பதும் ஆகும். சமையல் செய்பவரின் மனோபாவமும் அவர் செய்யும் உணவில் கலந்து விடுவது இயற்கையே.

சமைப்பவர் நல்ல குணமும், ஒழுக்கமும் கொண்டவராக இருக்க வேண்டும். மிகவும் தூய்மையை விரும்புபவர்கள் நிச்சயமாக தங்கள் தேவைகளை தாங்களே நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று முற்காலத்தில் நம் முன்னோர்கள் நெறிமுறைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

நாம் நமக்காக சமைக்கும் போது அதை சாதம் என்று அழைக்கிறோம். அதே உணவினை ஆண்டவனுக்கு படைத்த பின் மீண்டும் நம்மிடம் கொண்டு வரும்போது பிரசாதமாகி விடுகிறது. 'பிர' என்றால் 'கடவுள் தன்மை'.

உணவு என்பது மட்டுமல்ல, கடவுளுக்குப் படைக்கும் எந்தப் பொருளும், மேலும் புனிதம் பெற்று நம் மனதைத் தூய்மைப் படுத்துகிறது. கடவுளுக்குப் படைக்கப்பட்ட உணவினால் (பிரசாதத்தினால்) நம் உணர்வுகள் மேன்மைபெற்று வாழ்வு அர்த்தமுள்ளதாக மாறிவிடுகின்றன.

# சகல நன்மைதரும் காமாட்சி விளக்கு

காமாட்சி விளக்கு மட்டும் ஏன் அனைத்து வீடுகளிலும் இருக்க வேண்டும் தெரியுமா? இந்துக்களின் வீட்டில் காமாட்சி விளக்கை பொதுவாகக் காணலாம். எத்தனையோ தெய்வங்கள் இருந்தாலும், அது ஏன் காமாட்சி விளக்கு மட்டும் அனைவரது வீடுகளிலும் உள்ளது. அனைத்து விசேசங்களிலும் எதற்காக காமாட்சி விளக்கிற்கு மட்டும் அதிமுக்கியத்துவம் தரப்படுகிறது? வாருங்கள் பார்ப்போம்.

ஒரு சமயம் காமாட்சி அம்மன், உலக மக்களின் நன்மைக்காகக் கடும் தவம் புரிந்தாள். அப்போது சகல தெய்வங்களும் அவளுள் அடங்கியது. ஆகையால், ஒருவர் காமாட்சி அம்மனை வணங்கினால் அனைத்து தெய்வங்களையும் வணங்கியதற்கான பலனைப் பெறலாம்.

இன்று போல் பழங்காலத்தில் புகைப்படங்களைக் கொண்டு தெய்வத்தை வழிபடவில்லை. மாறாக விளக்கேற்றிதான் தெய்வத்தை வழிபட்டனர். காமாட்சி அம்மனுக்குள் சகல தெய்வங்களும் அடக்கம் என்பதால், அவரவர் தங்களுடைய குல தெய்வங்களை நினைத்துக் கொண்டு காமாட்சி விளக்கை ஏற்ற ஆரம்பித்தனர்.

இதன் மூலம் காமாட்சி அம்மனின் அருளும், குலதெய்வத்தின் ஆசியும் கிடைத்தது. விளக்குகளிலேயே மிகப் புனிதமானதாகக் கருதப்படும் காமாட்சி விளக்கை, சிலர் பரம்பரை பரம்பரையாகப் பாதுகாத்து வருகின்றனர்.

திருமண சமயங்களில் மணமக்கள் காமாட்சி விளக்கை கையில் ஏந்திக் கொண்டு வலம் வருவதற்கும், புகுந்த வீட்டில் முதன் முதலில் காமாட்சி விளக்கை ஏற்றுவதற்கும் காரணம், அனைத்து தெய்வங்களின் அருளை ஒரு சேர பெறவே. அதோடு குலதெய்வமும் அந்த விளக்கில் இருந்து அருள்புரிவதால், முதல் முதலில் அந்த விளக்கை ஏற்றுவதன் மூலம் அந்த குலம் தழைத்து, வாழையடி வாழையாக வளரும் என்பது நம்பிக்கை.

பல புனிதர்கள் நிறைந்த காமாட்சி விளக்கை, தினம்தோறும் வீட்டில் ஏற்றி வழிபடுவதன் மூலம் நமது வாழ்வில் சகல சந்தோசங்களும் பெருகும்.



# விசுணுவின் தந்திரத்தால் பறிபோன சிவனின் வீடு

## பத்ரிநாத்தின் புராணக் கதை

பத்ரிநாத் குறித்தொரு புராணக் கதை உண்டு. சிவனும் பார்வதியும் இங்குதான் வசித்தார்கள். இமயமலையில் 10,000 அடி உயரத்தில் இந்தப் பகுதி அமைந்துள்ளது. ஒருநாள் சிவனும், பார்வதியும் வெளியே உலாச்சென்று திரும்பியபோது, வீட்டு வாசலில் ஒரு குழந்தை அழுது கொண்டிருந்தது. கதறி அழுகிற குழந்தையைப் பார்த்ததும் பார்வதியின் தாய்மை உணர்வு விழித்துக் கொள்ள, அந்தக் குழந்தையை அள்ளியெடுக்கப் போனார். சிவன் தடுத்தார். "குழந்தையைத் தொடாதே" என்றார்.

அதிர்ச்சியடைந்த பார்வதி, "இவ்வளவு கல் மனம் படைத்தவரா நீங்கள்?" என்று சினந்து கொள்ள, சிவன் சொன்னார்,

"இது நல்ல குழந்தையில்லை. நம் வீட்டு வாயிலில் ஏன் கிடக்க வேண்டும்? இதை விட்டுச் சென்றவர்கள் காலடித் தடமெதுவும் பனித்தடத்தில் பதியவேயில்லை. இத்தனை உயரமான மலையில் தானாக இந்தக் குழந்தை முளைத்ததா என்ன?"

சிவன் எவ்வளவு சொல்லியும் பார்வதி கேட்பதாயில்லை. குழந்தையை உள்ளே தூக்கிக் கொண்டு போனார். அந்தக் குழந்தை பார்வதியின் மடியில் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டு, சிவனைக் கேலியாகப் பார்த்துக் கொண்டிருந்தது. "நடப்பது நடக்கட்டும்" என்று சிவனும் விட்டு விட்டார்.

குழந்தைக்கு உணவூட்டிய பார்வதி, அதை உறங்கச் செய்துவிட்டு அருகிலிருந்த வெந்நீர் ஊற்றில் நீராட சிவனுடன் சென்றார். திரும்ப வந்து பார்த்தபோது அவர்களின் வீடு உட்புறமாக இறுகத் தாழிடப்பட்டிருந்தது. பார்வதி அதிர்ந்தார். "இது யார் செய்த வேலை?" என்றார்.


"நீ ஆசையாகத் தூக்கி வளர்த்த குழந்தையின் வேலை. எவ்வளவோ சொன்னேன். நீ கேட்கவில்லை" என்றார்.

"என்ன செய்யலாம்?" என்றார் பார்வதி.

சிவனுக்கிருந்தது இரண்டே வழிகள். ஒன்று, அந்த வீட்டை எரித்து விடுவது அல்லது, அந்த இடத்தை விட்டு அகன்றுவிடுவது. சிவனும் பார்வதியும் அந்த இடத்தை விட்டு மெல்ல அகன்றார்கள். குழந்தை வடிவில் வந்த திருமால் பத்ரிநாத்தில் கோவில் கொண்டார். சிவனும், பார்வதியும் கேதார்நாத்தில் தங்கள் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார்கள். வந்தது திருமால் என்பது சிவனுக்குத் தெரியவில்லையா? என்று நீங்கள் கேட்கலாம். சில விசயங்கள் தெரிந்தாலும் நடப்பதற்கு அனுமதிக்கத்தான் வேண்டியிருக்கிறது.



# சிவனையே ஆட்டம் காண வைத்த பக்தன்



ஒரு ஊரில் வயதான சிவ பக்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். சிவனின் பரிபூரண அருள் அவருக்கு இருந்தும் கூட, எந்த வித பெருமிதமும் இன்றி மிக எளிமையாக வாழ்ந்து வந்தார். ஒரு நாள் தன்னுடைய குடிசையின் அமர்ந்து கொண்டு கிழிந்த தன் துணியை தைத்துக் கொண்டிருந்தார்.

இது ஒருபுறம் இருக்க சிவனும், பார்வதி தேவியும் உலக மக்களின் நிலை அறிய வான்வெளியில் வளம் வந்து கொண்டிருந்தனர். அப்போது பார்வதி தேவி அந்த வயதான சிவ பக்தரைக் கண்டார்.

உடனே சிவனிடம் அவரை காண்பித்து, 'ஐயனே இவருக்கு நாம் ஏதாவது வரம் வழங்க வேண்டும்' என்றார். அவரை பார்த்த சிவன் 'அவன் அந்த நிலையை எல்லாம் கடந்து விட்டான் தேவி. நாம் நமது பயணத்தைத் தொடரலாம்' என்றார். ஆனால், பார்வதி தேவி அவரை விடவில்லை. ஒருவழியாக சிவனை அழைத்துக் கொண்டு, அந்த பக்தனைக் காண பார்வதி தேவி வந்தார்.

இவர்களைக் கண்டதும் அந்த வயதான பக்தர் மனம் மகிழ்ந்தார். தன்னுடைய குடிலில் அமரவைத்து, தாகத்திற்கு மோர் கொடுத்தார். பின் தான் செய்து கொண்டிருந்த உடை தைக்கும் பணியை அவர் மீண்டும் தொடங்கினார். சில நிமிடங்கள் இப்படியே சென்றது. உடனே பார்வதி தேவி தன் கண்களால் சிவனிடம் சைகை செய்ய, உடனே சிவபெருமான் தன் பக்தனிடம், 'நாங்கள் விடை பெறுகிறோம்' என்றார்.

'தங்களின் வருகை எனக்கு சந்தோசத்தைத் தந்தது. மகிழ்ச்சியாய் நீங்கள் சென்றுவாருங்கள்' என்று கூறிவிட்டு, மீண்டும் தன் பணியை அவர் தொடர்கிறார்.

பார்வதி தேவி மீண்டும் சிவனிடம் சைகை செய்ய, உடனே சிவன், 'பக்தா நாங்கள் இருவரும் யாருக்கேனும் காட்சி அளித்தால், அவருக்கு வரங்களைத் தருவது எங்கள் வழக்கம். ஆகையால் உனக்கு தேவையான வரத்தை நீ கேள் நாங்கள் தந்து விட்டு செல்கிறோம்' என்றார்.

இதை கேட்டு புன்னகைத்த அந்த முதியவர், 'நீங்கள் இப்படி கேட்டதே

மகிழ்ச்சி. ஆனால், எனக்கு எந்த வரமும் வேண்டாம். நீங்கள் உங்கள் பயணத்தைத் தொடருங்கள்' என்றார்.

பார்வதி தேவி விடுவதாக இல்லை. 'நீங்கள் ஏதாவது வரம் கேட்கத்தான் வேண்டும்' என்றார்.

'சரி நீங்கள் இவ்வளவு வற்புறுத்துவதால் நான் ஒரு வரம் கேட்கிறேன்' என்ற அந்த முதியவர்.

'நான் இந்த உடையை தைக்கும் சமயத்தில் எப்போதும் ஊசியின் பின் நூல் வர வேண்டும்' என்றார்.

இதை கேட்டுத் திகைத்த சிவனும், பார்வதி தேவியும் 'இப்போதே அது அப்படி தானே நடக்கிறது' என்று கூறினார்கள்.

அதற்கு அந்த முனிவர், 'ஊசியில் நூல் கோர்த்துத் தைக்கும்போது, ஊசிக்கு பின் நூல் செல்வது இயல்பான விடயமே!. அதே போல தான் நான் செய்யும் செயல்கள் மூலம் எனக்கு வர வேண்டிய பலன்கள் தானாக வரும். நான் நல்லது செய்தால் நல்லது வரும், கெட்டது செய்தால் கெட்டது வரும். நான் நல்லதை மட்டுமே செய்கிறேன் என்று நம்புகிறேன். இதற்கிடையில் எனக்கு எதற்கு இந்த வரம்' என்றார்.

இந்த விளக்கத்தைக் கேட்ட சிவனும், பார்வதி தேவியும் புன்முறுவல் புரிந்தவாறு அங்கிருந்து சென்றனர்.



# அழுகிய தேங்காய் அபசகுனமா? நல்ல சகுனமா?

கோவிலில் பூசைக்கு கொடுத்த தேங்காய் அழுகிய நிலையில் இருந்தால் அபசகுனம் என சிலர் கூறுவார்கள். உண்மையிலேயே அழுகிய தேங்காய் அபசகுனமா? நல்ல சகுனமா? என்பது குறித்து பார்க்கலாம். வீட்டில் என்ன ஒரு சுபநிகழ்வுகள் நடந்தாலும் அதில் ஒரு முக்கிய இடம் தேங்காய்க்கு இருக்கும்.

சாமிக்கு பூசை செய்வதில் இருந்து சடங்கு சம்பிரதாயம் என எதுவாக இருந்தாலும் தேங்காய் உடைப்போம். இப்படி வீட்டில் அல்லது கோவிலில் பூசைக்கு கொடுத்த தேங்காய் அழுகிய நிலையில் இருந்தால் அபசகுனம் என சிலர் கூறுவார்கள். உண்மையிலேயே அழுகிய தேங்காய் அபசகுனமா? நல்ல சகுனமா? தேங்காய் உடைக்கும் போது அது அழுகிய நிலையில் இருந்தால் ஆன்மிகம் சார்ந்து இருப்பவர்களுக்கு அது ஏமாற்றத்தை, கலக்கத்தை ஒரு மன குழப்பத்தை அளிக்கும்.

இதை ஒரு அபசகுனமாக பார்பார்கள். ஆனால், உடைக்கும் போது அழுகிய தேங்காய் வருவது நல்ல அறிகுறி என்றும். உங்களை அண்டி இருக்கும் தீய சக்திகள், பீடை, கண்திருஷ்டி போன்றவை அகன்று போகிறது என்பதன் நல்ல அறிகுறி தான் இது என கூறப்படுகிறது.

கோவிலில் சாமிக்கு படைக்கும் தேங்காய் மட்டும் அழுகக்கூடாது. காரணம் அழுகிய தேங்காயை சாமிக்கு படைக்க கூடாது என்பது மட்டுமே பொருள். மற்றபடி அது அபசகுணம் அல்ல.

# ஆன்மீகத்தில் துளசிக்கு ஏன் இத்தனை முக்கியத்துவம்?

துளசி புனிதமான தாவரமாகக் கருதப்படுகிறது. இது ஆயுர்வேத மருத்துவத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கிறது. மற்ற செடி, கொடிகளைக் காட்டிலும் சூரியனிடமிருந்து அதிகமான வெப்பத்தை ஈர்ப்பதாலேயே கொளுத்தும் வெயிலிலும் கூட துளசி பிரகாசமாக தளைத்திருக்கிறது.



சூரிய வெளிச்சத்தினால் இதன் இலை பெரிதாகவும் மற்றும் அடர்த்தியானதாகவும் இருக்கும். சமயங்களில் அடர் பச்சை அல்லது கருப்பு நிற சாயலையும் இது பெற்றிருக்கும். இந்த ரக துளசியைக் கிருசுண துளசி அல்லது கருப்பு துளசி என்று அழைக்கிறார்கள்.

ஆனால், எதற்காக துளசிக்கு இத்தனை மகத்துவம்? ஏன் இது மற்ற செடி கொடிகளை காட்டிலும் இத்தனை பிரபலம்? காரணம் அதன் மருத்துவ குணங்களும், தெய்வாம்சம் பொருந்திய புராணப் பின்னனியும்.

இயற்கையிலேயே இன்று இருக்கக் கூடிய தட்ப வெட்ப சூழலில் நம் அனைவரையும் உடல்நல ரீதியில் பாதிக்கக்கூடிய பொதுவான விசயம் சளிப்பிடித்தல். இந்த பிரச்சனைக்கு அருமருந்தாக ஆயுர்வேதத்தில் கருதப்படுவது துளசி. இதற்கு அதீதமான கபத்தையும், வாதத்தையும் அழிக்கக்கூடிய தன்மை வல்லமை உண்டு. துளசிச்சாறு தேனுடன் எடுத்து கொள்கிற போது, சளிப்போன்ற கப பிரச்சனைகளுக்கு எதிராக மிகச் சிறப்பாக செயல்பட கூடிய மருந்தாக அது அமைகிறது.



நாம் வழக்கமாக நாம் அருந்துகிற தேநீரில் இரண்டு இலைகளைக் கசக்கி, அதன் சாறு படியுமாறு அருந்தினாலே அது நம் சளிக்கு எதிரான எதிர்ப்புச்சத்தியை அதிகரிக்கும்.

துளசி என்பது மிகத்தீவிரமான ஒரு ருசியை கொண்டது. அதன் மணம் தெய்வீகத்தன்மை கொண்டது. துளசி உடலுக்கு சூடு என்று பொதுவாக சொல்லப்படுவது உண்டு. ஆனால், ஆய்வின் படி துளசி பித்தத்தை கூட்டாது அன்றி, உடலில் உள்ள உசுணத்தை சமநிலைப்படுத்தும்.

பெரும் மகத்துவம் வாய்ந்த துளசியை பெரும்பாலான குடும்பங்கள் வீடுகள் தோறும் வைத்து வளர்ப்பதை நம்மால் காண முடியும். எதற்காக செடி வளர்ப்பில் துளசிக்கு இத்தனை பாரம்பரியமிக்க முக்கியத்துவம் வழங்கப் படுகிறது?. காரணம் துளசியினால் உடலுக்கும், மனதுக்கும் தீங்கிழைக்கக் கூடிய கிருமிகளை அழிக்கின்றது. தீயது என சொல்லப் படுகிற எதிர்மறை ஆற்றலை தடுக்கிறது.

ஆன்மீக ரீதியில் சொல்லப்படும் ‘ஆரா’ என்னும் ஒரு சூட்சும ஆற்றல் வளையம் துளசிக்கும் உண்டு. துளசிச்செடியின் அருகே ஒரு தீபத்தை ஏற்றுகிற போது, அதன் ஒளியினால் துளசியின் ‘ஆரா’ வலுவடைந்து எதிர்மறை ஆற்றலை எதிர்கிற தன் வல்லமையை மென்மேலும் பெருகும் என்பது நம்பிக்கை.

துளசிசெடியிற்கு புராண ரீதியாகவும் அதீத முக்கியத்துவம் உண்டு. திருமாலுக்கு உகந்த செடியென்றும், விசுணு தன் இருப்பிடமாகத் துளசியைக் கொண்டிருக்கிறார் என்றும் சொல்லப் படுவதுண்டு.

மேலும் துளசி என்கிற செடியினுள் மருத்துவ ரீதியாகப் பிராண சக்தியாக விளங்கக் கூடிய ஆக்சிசனுக்கு உறுதுணையாக இருக்கும் தன்மை உண்டு. அதனாலேயே இது மற்ற செடிகளை விடவும் அதீத தனித்துவம் மிக்கதாக திகழ்கிறது.

எனவே, பாரம்பரியத்தில் துளசியின் இடம் நிகரற்றது. கலாச்சாரம் முக்கியத்துவம் வாய்ந்த துளசி என்கிற இந்த செடியின் மகத்துவம் உண்மையில் இந்தியர்களின் வாழ்வியல் சார்ந்தது. குடும்ப அமைப்பில் இதுவும் ஒரு அங்கமாக கருதப்படுவதும் உண்டு.



ஆலமரத்தின் மேல் ஒரு குயில் மெல்ல கூவியது. மரத்தின் அடிப் பகுதியில் குருவின் முன் அமர்ந்திருந்தான் விசுவநாத பிரம்மச்சாரி. அவனது கண்கள் கலங்கி இருந்தன. தனது கைகளால் குருவின் கால்களைப் பற்றியவாறே பேச துவங்கினான்.

"குருவே உங்களிடமிருந்து வேத சாததிரத்தையும், பிரம்ம சூத்திரத்தையும் முழுமையாகக் கற்று கொண்டேன். உண்மை பொருளை கூறும் அனைத்து கருத்துகளையும் நீங்கள் எனக்கு விளக்கியுள்ளீர்கள். உங்களிடம் பணிவிடை செய்வதிலும், உங்களுடன் இருப்பதிலும் எனக்கு நிகரில்லாத ஆனந்தம் கிடைக்கிறது. இப்படி இருக்க, என்னை ஏன் வேறு இடத்தில் இருக்கும் ஒரு ஞானியை குருவாக ஏற்க கட்டளை இடுகிறீர்களே. இது நியாயமா?" என்றான்.

அவனை மெல்ல தனது கரத்தால் தூக்கிய குரு, அவனை தீர்க்கமாகப் பார்த்தார். "விசுவநாதா..! சாததிர ஞானத்தை மட்டும் தான் என்னால் உனக்கு வழங்க முடியும். உனக்கு பிரம்ம ஞானத்தை வழங்க குரு ஒருவர் காத்திருக்கிர்றார்.

காசிக்கு அருகில் இருக்கும் வனத்தில் வசிக்கும் அவரை கண்டு ஞானம் அடைவாயாக. வளர்ச்சி அடையும் வரைதான் புழு கூட்டில் வசிக்க முடியும். அதன் பின் வண்ணத்து பூச்சியாக மாற கூட்டைக் கடந்து சென்றாக வேண்டும். சென்று வா" என்றார் குரு.

பிரிய மனமில்லாமல் தனது குருநாதரிடமிருந்து விடைபெற்றான் விசுவநாத பிரம்மச்சாரி.

காசியை அடைந்து, அங்கு அவன் பெயரில் வீற்றிருக்கும் விசுவநாதரைத் தரிசித்துவிட்டு, நகரின் வெளியே இருக்கும் வனத்தை நோக்கி நடந்தான். வனத்திற்கு உள்ளே இரு நாட்களாக நடந்தும் யாரும் கண்களுக்குத் தட்டு படவில்லை. தனது குரு அனுப்பியதன் நோக்கம் புரியாமல் குழப்பம் மேலோங்க, பயணத்தைத் தொடர்ந்தான். பசியும், தாகமும்



# சிவன் எங்கே இருக்கிறார்?



அவனைச் சோர்வடைய செய்தது. வழியில் தென்பட்ட தடாகத்தில் நீர் அருந்தக் குனிந்தான்.

அந்த தடாகத்தின் மேல்பரப்பில் அருகில் இருந்த கோவில் கோபுரம் நிழலாகதெரிந்தது. நடுக்காட்டில் கோவில் இருப்பதைக் கண்டு ஆச்சரியத்துடன் அதை அடைந்தான். கோவில் வாசலை அடையும் முன் உள்ளே இருந்து ஓர் குரல் பேச துவங்கியது.

“வா விசுவநாத உனக்காகத்தான் காத்திருக்கிறேன். உனது குரு என்னை பார்க்கவே அனுப்பினார்..”

தனது ஞான குருவை காணும் ஆவலில் கோவிலின் உள்ளே சென்றான் விசுவநாதன். அங்கே கண்ட காட்சி அவனை மாபெரும் அதிர்ச்சி அடைய செய்தது.

பரதேசி போன்ற தோற்றம் கொண்ட ஒருவர், கருவறையில் இருக்கும் சிவலிங்கத்தின் மேல் தனது கால்களை வைத்து ஆட்டியவாறு, தலையில் கைகளை வைத்து கொண்டும் படுத்திருந்தார்.

விசுவநாதனுகோ கோபத்தைக் கட்டுபடுத்த முடியவில்லை. “எனது குரு உங்களைப் பற்றி உயர்வாகக் கூறி அனுப்பினார். நீங்கள் அவர் சொன்னதற்கு நேர்மாறாக அல்லவா இருக்க்கிறீர்கள். ஐயா சற்று சிவன் மேல் இருக்கும் காலை எடுத்து கீழே வைக்க கூடாதா?” என்றான்.

அந்த பரதேசி சற்றும் அவனது கருத்துகளைக் காதில் போட்டுக் கொள்ளாமல், அவனைப் பார்த்து கூறினார்.

“ஓ நீ அவ்வளவு பக்திமானா? உனக்குவேண்டுமென்றால் எனது கால்களை எடுத்து வேறு இடத்தில் வை. என்னால் கால்களை எடுக்க முடியாது..” என்றார்.

கோபத்தின் உச்சகட்டத்திற்கு சென்ற விசுவநாதன், அவரின் கால்களைப் பற்றி, சிவலிங்கத்தின் மேலிருந்து எடுத்து வேறு இடத்திற்கு மாற்ற முயற்சி செய்தான். கால்களை எங்கு வைத்தாலும் அங்கே ஓர் சிவலிங்கம் முளைத்தது. பல இடங்களில் மாறி மாறி வைத்தான். அனைத்து இடத்திலும் சிவலிங்கம் தோன்றின.

கடைசியல் முடிவுக்கு வந்தவனாக, தனது தலையில் அவரின் கால்களை வைத்து கொண்டான்...

தானே சிவமானான்...

# கந்தசட்டி விரதம் தரும் பலன்



முருகனுக்கு முக்கிய விரத நாளாகப் பார்க்கப்படும் சட்டி விரதம் இருப்பது எப்படி? சட்டி விரதம் இருந்தால் என்ன பலன்? என்பது குறித்து பார்ப்போம்.

கார்த்திகை மாதம் வளர்ப்பிறையில் வரக்கூடிய சட்டி, மகா சட்டி என அழைக்கப்படுகிறது. அந்த நாளை சேர்த்து மொத்தம் 6 நாட்கள் விரதம் இருப்பதும், சூரசம்காரப் பெருவிழாவுடன் இந்த விரதம் நிறைவடையும்.

இந்த சட்டி விரதம் சிறப்பாக நடக்கும் திருச்செந்தூர் கோயில் முருகனின் ஆறுபடை வீடுகளில் 2வது படை வீடாகும். குழந்தை வரம் வேண்டி, முருகனை நினைத்து விரதமிருக்க, அவரே குழந்தையாகப் பிறப்பார் என்பது ஐதீகம்.

ஒவ்வொரு மாதமும் வளர்பிறை, தேய்பிறைகளில் சட்டி திதி வருவது வழக்கம். அப்படி கார்த்திகை மாதத்தி வரும் வளர்பிறை சட்டிக்கு 'மகா சட்டி' என அழைக்கப் படுகிறது. இந்த தினத்தில் திருச்செந்தூர் கோயிலில் ஆயிரக் கணக்கானப் பக்தர்கள் விரதமிருந்து வழிபடுவது வழக்கம்.



குழந்தை வரம் பெற விரும்புபவர்கள் சட்டி தினங்களில் விரதமிருக்கலாம். ஆனால், கார்த்திகை மாதத்தில் வரக்கூடிய வளர்பிறை மகா சட்டியில் 6 நாள் விரதம் கடைப்பிடிப்பது மிக விசேடமானது. அப்போது குழந்தை வரம் வேண்டும் தம்பதியர் இருவரும் சேர்ந்து விரதம் இருப்பது நல்லது. கோயிலிலோ அல்லது வீட்டிலிருந்து கூட விரதம் இருக்கலாம்.

விரதம் இருக்கும் அன்பர்கள் தங்களின் உடல் நிலையை கருத்தில் கொள்வது அவசியம். மருத்து, மாத்திரைகளை எடுத்துக் கொள்பவர்களும், உடல் நல பிரச்னை உள்ளவர்கள் இந்தத் தீவிர விரதத்தை யோசித்து முடிவு செய்யவும். குழந்தை வேண்டும் தம்பதியர், வேலையில் இருந்தாலும், நாம் அலுவலகத்தில் கூட விரதம் இருக்கலாம். காலையில் எழுந்து குளித்து, முருகனுக்கு பூசை செய்து உங்களின் விரதத்தை தொடங்கலாம்.

கந்த சட்டி ஏற்கும் பக்தர்கள் பல வகைகளில் விரதம் இருப்பதுண்டு. சிலர் வெறும் தண்ணீர் மட்டும் குடித்தும், சிலர் பால் பழம் மட்டும் எடுத்துக் கொள்ளும் முறைகள் உண்டு. சூர சம்கார நிகழ்வு முடியும் வரை விரதம் இருப்பதும், பின்னர் சுவாமி தரிசனம் செய்து விரதத்தை முடிக்கலாம்.

**விரதத்தின் போது செய்ய வேண்டியது:**

பக்தர்கள் விரதத்தின் போது, முருகனின் மந்திரங்களை பாராயணம் செய்தல், முருகனின் திருவிளையாடல் கதைகளைப் படிப்பது நல்லது. கந்த சட்டி கவசம் படித்தல், திருப்புகழ் உள்ளிட்டவை படித்து முருகனின் அருளைப் பெறலாம்.



# பிள்ளையாரும் அறுகும்

அருகம்புல் எவ்வளவு காலம் மழை இல்லாவிட்டாலும் காய்ந்து போய் காணப்படுமே தவிர அழிந்து போகாது. சிறிது மழை பெய்தால் கூட உடனே துளிர்விடும். அதுபோல் எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் சோர்ந்து போகாமல் நம்பிக்கையோடு இருக்க வேண்டும் என்று நம் முன்னோர்கள் அருகம்புல்லை உதாரணமாகச் சொல்லி வாழ்த்துவதைப் பார்க்கும்போதே அதன் மகத்துவம் நமக்குத் தெரியவரும்.

கணபதியின் பூசைக்கு உரியதானது அருகம்புல். தூர்வை, மேகாரி, பதம், மூதண்டம் என பல பெயர்களால் சிறப்பிக்கப்படும் அருகம்புல் கணநாதருக்கு மட்டும் அல்ல, மூலிகையாக எடுத்துக் கொண்டால் நமக்கும் நலம் பயப்பவை தான். ஆன்மீகத்துடன் மருத்துவத்தைக் கலந்தே நம் முன்னோர்கள் சொல்லி வந்தனர். அருகம்புல் முழுத்தாவரமும் இனிப்புசுவையும், குளிர்ச்சித் தன்மையும் உடையது. உடல் வெப்பத்தை அகற்றும். சிறுநீர் பெருக்கும். குடல் புண்களை ஆற்றும்.

ரத்தத்தை தூய்மையாக்கும் மற்றும் உடலை பலப்படுத்தும், அருகம்புல்லை பிள்ளையார் புல் என்று அழைப்பார்கள். பல்வேறு சிறப்புகளைக் கொண்ட அருகம் புல்லை செவ்வாய் கிழமையன்று விநாயகருக்கு சாற்றி வணங்க தீராத கடன் பிரச்சினையும் தீரும்.

# நவராத்திரி விரதம்

சக்தியை நோக்கி அனுட்டிகும் விரதங்களில் ஒன்று தான் நவராத்திரி விரதம். மனிதனுக்கு அவசியமான ஆற்றலின் அதிதேவதையாக விளங்குகின்ற சக்தியைப்போற்றும் விரதமாக நவராத்திரி விரதம் அனுட்டிக்கப் படுகிறது. நவராத்திரியின் ஒன்பது நாட்களும் விரதம் இருப்பவர்கள், உபவாசியாக இருந்து பூசித்த பிறகே உணவருந்தி, பஞ்சனை மற்றும் பாயில் படுக்காமல் தரையில் விரிப்புகளில் படுக்க வேண்டும். பிரதமைத் திதியில் அஸ்த நட்சத்திரம் கூடுமானால் அது உன்னதமான நாளாகும். அந்த நாளில் தேவி தன்னைப் பூசித்தவருக்கு வேண்டிய வற்றையெல்லாம் கொடுப்பாள் என்று சொல்வார்கள்.

நவராத்திரி வழிபாடு சக்தி மகிமையை விளக்கும் மனிதனின் முக்கிய தேவைகளான கல்வி, செல்வம், வீரம் இம்மூன்றையும் வேண்டி அவற்றுக்கு அதிபதிகளான சரசுவதி, லட்சுமி, துர்க்கை என்று மூன்று சக்தி அம்சங்களையும் வழிபடுதலே இவ்விரதத்தின் நோக்கமாகும்.

முதல் மூன்று நாட்களில் வீரத்தையும், தைரியத்தையும் வேண்டி பராசக்தியை வழிபடுதல் வேண்டும். அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தை வேண்டி மகாலட்சுமியை வழிபட வேண்டும். இறுதி மூன்று நாட்களும் கல்வி, அறிவு, சகல கலை ஞானங்கள் என்பவற்றை வேண்டி சரசுவதிதேவியை வழிபட வேண்டும்.

சுமங்கலிப் பெண்களை இவ்விரத நாட்களில் வீட்டுக்கு அழைத்து அவர்களை பராசக்தியாகப் பாவித்துக் கொலுவின் அருகில் அமரச்செய்து வணங்கி மஞ்சள், குங்குமம், பட்டு, நாணயம், தாம்பூலம் என்பவற்றை வழங்குவர்.

நவராத்திரி காலத்தில் எண்ணெய் தேய்த்து முழுகுதல் விலக்கப் பட்டுள்ளது. ஊசி நூல்கொண்டு தைத்தலும் கூடாது. புரட்டாசி சனி விரதம் இந்த நவராத்திரி நாட்களில் வரும்போது எண்ணெய் தேய்க்காது நீராடி, அந்த விரதத்தையும் கை கொள்ளலாம். எண்ணெய் எரித்து வழிபடுதலும் செய்யலாம்.

நவராத்திரி விரதத்தை முறையாகக் கைக்கொள்ள விரும்புவோர் முதலெட்டு நாட்களிலும், பகலில் உணவின்றி இரவில் பூசை முடித்தபின் பால்பழம், பலகாரம் என்பவற்றை உண்டு, நவமியில் உபவாசமிருந்து பத்தாம் நாள் விசய தசமியன்று காலை எட்டரை மணிக்கு முன் பாரணை செய்தல் வேண்டும். முடியாதவர்கள் முதலெட்டு நாளிலும் ஒருநேர உணவுண்டு, கடைசி நாளில் பால், பழம் மட்டும் கொள்ளலாம்.

நவராத்திரி விரதத்தைப் போன்று எளிமையானதும், அதே நேரம் மிகுந்த





# கேதார கௌரி விரதம்

சிவபெருமானுடைய மஹா விரதங்களுள் கேதார கௌரி விரதமும் ஒன்று. இந்த விரத தை அம்மை கௌரியே அனுசிடித்தார் என்றால் அதன் பெருமைக்கு நிகர் எதுவுமில்லை. அம்மை ஐயனின் இடப்பாகம் பெற்று அர்தநாரீசுவராக ஆனது இந்த விரத மகிமையால். கேதார கௌரி விரதம் புரட்டாதி மாதம் சுக்லபக்ச அசுடமி நாள் தொடங்கி ஐப்பசி மாத அமாவாசை முடிய மொத்தம் இருபத்தொரு நாட்கள் இந்த விரதம் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஸ்கந்த புராணம் கூறுகிறது.

கேதாரம் என்பது இமயமலைச்சாரலைக் குறிப்பதாகும். அதாவது மலையைச் சார்ந்த வயல் பகுதியை கேதாரம் என்பர். இந்த இமயமலைக் கேதாரப்பகுதியில் சுயம்பு லிங்கமாக கேதாரேஸ்சுவரர் தோன்றினார். சக்திருபமான பார்வதி தேவி சிவனை நினைத்து வழிபட்டு அதன் பலனாக அர்த்தநாரியாகவும், அர்த்த நாரீசுவராகவும் ஒன்றுபட்ட தினமே கேதார கௌரி விரதமாகும். வயலில் ஆலமரத்தடியில் இருந்து இவ்விரதம் அனுசிடிக்கப்பட்டதால் கேதாரகௌரி விரதம் எனவும், ஈசனை வழிபடுகின்றபடியால் கேதா ரேஸ்வரி விரதம் எனவும் பெயர் பெறுகிறது. மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்களகரமாக இருக்க வேண்டி யும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை (கணவனை) வேண்டிவும் இந்த விரதத்தை அனுசிடிக்கின்றனர். மங்கள கரமான வாழ்க்கையை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுசிடிக்கின்றனர்.

பலன்களைத் தரக் கூடியதுமான வேறு விரதங்கள் இல்லை என்கின்றன புராணங்கள். தனம், தானியம், நிலையான இன்பம், நீண்ட ஆயுள், ஆரோக்கியம், சொர்க்கம், மோட்சம் என ஒரு மனிதனுக்கு வேண்டிய அனைத்தையும் தரக்கூடிய விரதம் நவராத்திரி விரதம்.

குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு நிச்சயம் குழந்தை பாக்கியம் கிட்டும். படிப்பில் மந்தமாக இருப்பவர்கள் இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பதால், உயர்ந்த நிலையை அடையலாம். ஒன்பது நாட்களும் வழிபட இயலாதவர்கள் அஷ்டமியன்று துர்கையை வழிபட்டு, அன்று இரவு விழித்திருந்தால், அவர்களின் வாழ்க்கையை துர்கா தேவியானவள் கண் விழித்துக் காப்பாள்.

அதேபோன்று, மூல நட்சத்திரம் அல்லது நவமியன்று நாம் அன்றாடம் வேலைக்கு உபயோகப் படுத்தும் பொருட்களையும், குழந்தைகளின் புத்தகங்களையும் பூசையில் வைத்து வழிபட்டு, அன்று அவற்றை பயன்படுத்தாமல், அடுத்த நாள் விசய தசமியன்று அந்த பொருட்களைக் கண்டிப்பாக பயன்படுத்துதல் சிறப்பு.

நவராத்திரி பண்டிகையை முதன்முதலில் இராமர் தான் கொண்டாடியதாகக் கூறப்படுகிறது. இராமபிரான் நவராத்திரி விரதத்தைக் கடைபிடித்த பிறகு தான் அவருக்குச் சீதை இருக்குமிடம் தெரிந்தது என கூறப்படுகிறது.

பாகம்-20

# அறிவோம் ஆன்மீகம்



தமிழர்களின் ஆன்மீகச் சிந்தனைகள் தனி மனித ஒழுக்கத்தின் அடித்தளத்தில் அறிஞர் பெருமக்களால் கட்டமைக்கப் பட்டவை. அதனால் எமது மதம் தொடர்பான ஆன்மீகத் தேடல் புராண இதிகாசப் புரட்டுக் கதைகளை ஏற்பதும் இல்லை அவற்றில் நம்பிக்கை வைப்பதும் கிடையாது.

நாம் செய்யும் வினைகள் அவற்றால் உருவாகும் எதிர் வினைகளைக் கன்ம வினைகள் என்கிறோம். முற் பிறவியில் செய்த வினைகள முழுமையாக யாராலும் தம் வாழ் நாளில் அனுபவித்து முடித்து விட முடியாது. அதனால் அவை முன்வினையாக மறு பிறப்பை தீர்மானிக்கும் காரணியாக இருந்து விடுகிறது. அவற்றைச் சைவ சித்தாந்தம் பிராரப்த வினைகள் எனக் குறிப்பிடுகின்றன.

பிராரப்த வினைகள் புண்ணியம் நிறைந்தால் நல்லதாகவும் பாவம் நிறைந்தால் தீயதாகவும் பிறவிகளும் பெற்றோர்கள் உறவினர்களும் சிறப்பாக அமைந்து எமது இப்பிறவி அமைந்து விடும். அதனால் நாம் எமக்குக் கிடைத்த மனிதப் பிறப்பினூடாக நற்கதி அடைய வாழும் நெறி அறிந்து வாழ்ந்து சிவகதி இன்பத்தை அடைய கிடைத்த இப்பிறவியை பயன் படுத்துவது அவசியம். இப் பிறவியில் கிடைத்த வாய்பைத் தவற விட்டால் நாம் எமது அறியாமையில் சிக்கி மீண்டும் பல பிறவித் துன்பங்களை அனுபவிக்க நேரிடும்.

எனவே கிடைத்த இப் பிறவியிலேயே நாம் எமது முழு முதற் கடவளான சிவனின் அருளால் அவன் தாள்களை வணங்கி அடையும் பேரின்பத்தைத் தரும் இறைவன் திருவடி நிழற் பேறு பெறுவது ஒன்றே எமது பிறவிப் பெரும் பயனாக நினைத்து இந்த அரிய பிறவியின் முழுப் பயனையும் அடைய வேண்டும். அதற்கு ஏற்ற வாழ்க்கை முறையை எமது முன்னோர்கள் எமக்குச் சொல்லி விட்டு போனார்கள்.

எம் முன்னோர்கள் 5 பழக்கங்களைப் பஞ்சமா பாதகங்கள் எனக் குறிப்பிட்டு அவற்றைத் தவிர்க்கச் சொன்னார்கள். எமது 5ம் வயதில் நாம் கற்ற அவை எந்த அளவுக்கு உண்மையும்

அவசியமும் என்பதை எம் வாழ்வின் அனுபவ பாடமாக தெரிந்து இங்கே பதிலாகத் தருகிறேன்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம் பிற செய்யாமை செய்யாமை நன்று என்பது வள்ளுவர் வாக்கு. ஒளவையாரும் வேறு பல அறிஞர்கள் ஆன்மீக வாதிகளும் சொல்லும் இந்த அறிவுரையை முதன்மையாக கொள்ளுவதே தமிழரின் சிறந்த ஆன்மீகம் ஆகும்.

பொய்யாமை என்பதை சிந்தனை சொல் செயல் என மூன்று நிலைகளிலும் மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும். எமது சிந்தனையில் முதலில் எண்ணங்கள் வடிவமாகவும் அவற்றை எமது மனங்கள் சொல் செயல் வடிவங்களாகவும் மாற்றி எங்களை ஆட்டிப் படைக்கின்றன. அதனால்தான் வள்ளுவர் 'களவாக ஒரு பொருளை அடைவோம் என மனதால் நினைப்பதும் தீதே என 'உள்ளத்தால் உள்ளலும் தீதே கள்ளத்தாற் கவர்வோம் எனல்' என்றார்.

எல்லாக் குற்றங்களையும் செய்வதற்கான துணிச்சலையும் வெறியையும் தருவது பொய் பேசும் பழக்கம் தான். ஒரு பொய்யைக் காப்பாற்ற கோடி கோடியாகப் பொய்களைச் சொன்னாலும் அது எப்போது எப்படி அம்பலமாகி எம்மைக் குற்றவாளி ஆக்கிவிடும் எனச் சொல்ல முடியாது.ஆனாலும் எமது ஆசைகள் காரணமாக பொய்யிலே பிறந்து பொய்யிலே வாழ்ந்து பொய்யிலே சாகும் வாழ்வை வாழ்கிறோம்.

எனவே ஒருவன் நல்லவனாக உத்தமனாக வாழ பொய் பேசாமல் வாழ்ந்தாலே போதும். வேறு அறம் தேவை இல்லை என்பதைத் திருவள்ளுவர் இப்படிக் கூறுகிறார்.

“பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற

செய்யாமை செய்யாமை நன்று”

அடுத்த முக்கிய நற்குணங்களாக சூது, களவு, கள்ளு, காமம், என்பவற்றை எமது வாழ்வில் முற்றிலுமாகத் தவிர்த்து விடுவது கட்டாயமாகும். இவற்றை நாம் கடைப்பிடித்தால் எம்மைச் சுற்றி உள்ள யாருக்கும் எம்மைப் பிடிக்காது. முக்கியமாக நண்பர்கள் என எம்முடன் ஒட்டி வாழும் கெடுமதியாளர்களைச் சொல்லலாம்.

தாம் செய்யும் எல்லாக் கெட்ட செயல்களுக்கும் துணையாக எம்மையும் இழுத்து விட்டு தாம் செய்பவை எல்லாவற்றையும் எமது பெயரைச் சொல்லியே நியாயப் படுத்துவார்கள். தருணம் பார்த்து எல்லாப் பழிகளையும் எம்மீது சுமத்தி விட்டுத் தாங்கள் தப்பித்து விடுவார்கள். எனவே நாங்கள் எங்கள் நண்பர்களைத் தெரிவு செய்வதில் கவனமும் எச்சரிக்கையும் கொள்ளாது விட்டால் எமது கதி அதோ கதிதான்.

அதனால்தான் எம்மை விட வயதிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த மூத்தோரின் உறவும் நட்பும் கோடி கொடுத்தும் கொள்ள வேண்டும் என்றார்கள்.

இறுதியாக நாம் நல்ல நண்பர்களையும் நல்ல புத்தகங்களையும் எப்பொழுதும் எம்முடன் வைத்திருந்தால் யாரும் எங்களின் வாழ்வைச் சீரழித்து விட முடியாது என உறுதியாகச் சொல்ல முடியும். தமிழ் இனப் மிகப் பெரும் அழிவுகளை அனுபவிக்கக் காரணமானவை நாம் நம்பியவர்களும், நமது அரசியல் தலைவர்களும் இந்தப் பஞ்மா பாதகங்களையும் செய்வதில் எவ்விதம் தயக்கமும் காட்டாதவர்கள் என்பதை அவர்களின் 100 ஆண்டு கால அரசியல் வரலாறே சாட்சி.

நாம் இவ்வுலகில் நிலைத்து வாழ மிகப் பெரும் ஆன்மீகப் புரட்சியும் அது தொடர்பான புதிய புரிதலும் அவசியம்.

**(தேடல் தொடரும்)**



# பக்திக்கு தேவை மனவலிமை

துறவியின் மனவலிமையையும், இறைவன் காட்சி தந்து அருளிய கதையையும் கீழே விரிவாக பார்க்கலாம்.

அது ஒரு மலைக்கோவில். சிவதலமான அந்த மலையின் மீது ஏறி முதியவர் ஒருவர் சென்று கொண்டிருந்தார். வழியில் குகை போன்ற ஒரு புதர் இருந்தது. அதில் துறவி ஒருவர் அமர்ந்திருந்தார். அவரது ஒரு கால் மடக்கி வைக்கப்பட்ட நிலையிலும், மற்றொரு கால் துண்டிக்கப்பட்டு பாதையிலும் வீசப்பட்டிருந்தது. துண்டிக்கப்பட்டுக் கிடந்த காலையே பார்த்தபடி அமர்ந்திருந்தார் அந்தத் துறவி. அவரிடம் தன்னுடைய கால் போனதற்கான பரிதவிப்போ, பதற்றமோ எதுவுமே இல்லை. முதியவர் பதற்றத்துடன் அந்த துறவியைப் பார்த்து, கால் துண்டிக்கப் பட்டிருப்பதற்காக காரணத்தை வினவினார்.

'ஐயா! நான் இந்த ஈசனை நினைத்து தியானிப்பவன். இன்றும் அதே போல் தியானத்தில் ஈடுபட்டிருந்தேன். அப்போது இந்த வழியாக ஒரு பெண் சென்று கொண்டிருந்தாள். அவளுடைய அழகிய உருவம் என் மனதைக் கவர்ந்தது. அவளை நன்றாகப் பார்க்க வேண்டும் என்று என் மனதில் எண்ணம் ஏற்பட்டது. என்றைக்கும் ஏற்படாத அந்த ஆவலை கட்டுப்படுத்த எண்ணாத நான், அந்த பெண்ணைப் பார்ப்பதற்காக உடனடியாக எழுந்தேன். என் இருப்பிடத்தில் இருந்து ஒரு காலை வெளியே எடுத்து வைத்தேன். நல்ல காலத்திற்கு அடையாளமாக அப்போது என் மனதில் வேறொரு எண்ணம் தோன்றியது.

அந்த எண்ணம் என் மனசாட்சியாக என்னிடம் பேசியது. 'ஏ.. போலித் துறவியே! உனக்கு வெட்கமாக இல்லையா? 30 ஆண்டுகளாக தனிமையில் இருந்து தவம் செய்து வந்த நீ, இப்போது காமத்தின் வலையில் விழத் துணிந்து விட்டாயே..' என்று ஏளனம் செய்தது. மனசாட்சியின் வார்த்தை என் உடலை நடுங்கச் செய்தது. என்னைக் கண்டு எனக்கே அருவெறுப்பாக தோன்றியது. ஒரு பெண்ணைக் கண்டதும், அவளைக் காண எழுந்து போக உதவிய காலைத் துண்டித்தேன். பின்பு அதை பாதையில் வீசி எறிந்தேன். இப்போது என் மனம் நிம்மதியாக உள்ளது.

இதுவும் இறைவனின் லீலைகளில் ஒன்றுதான் என்று எண்ணி வியந்து கொண்டிருக்கிறேன். இறைவன் என்னை தடுத்தாற்கொண்ட கருணையை எண்ணி மனதில் மகிழ்ந்து கொண்டிருக்கிறேன்' என்றார் துறவி. அதைக் கேட்டதும் முதியவர் மறைந்து அந்த இடத்தில் சிவபெருமான் தோன்றினார். 'துறவியே.. உன்னுடைய மனதில் வலிமையைக் கண்டு எனக்கு மிக்க மகிழ்ச்சி. உன்னுடைய தவத்தை தொடர்ந்து செய்து, இறுதியில் என்னை வந்து அடைவாயாக...' என்று கூறி மறைந்தார்.

இறைவனின் கருணையால் துறவிக்கு மீண்டும் கால் சரியானது. பக்தனுக்கு அருளிய பரமனின் உள்ளத்தை எண்ணி மகிழ்ந்தவாறே, தியானத்தில் மூழ்கினார் துறவி.

# சிவனுக்கு மிகவும் உகந்த சோமவார விரதம்



கார்த்திகை மாதம் வரும் திங்கட்கிழமை சிவனுக்கு மிகவும் உகந்த நாளாகும். எனவே அன்றைய நாள் சோமவார விரதம் கடைப்பிடிக்கப் படுகிறது. இந்த விரதத்தைப் போல வேறு எந்த விரதத்திலும் சிவன் திருப்தியடைய மாட்டார் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. சோமவார விரத நாளில் காலையில் பெண்கள் வீட்டில் விளக்கேற்றி விரதத்தைத் தொடங்கலாம்.

இறைவனின் ஆயிரம் திருநாமங்களை கூறி வில்வத்தால் அர்ச்சித்தால் அனைத்து பாவங்களும் அகலும், மணப்பேறு, மகப்பேறு, வாக்கு, கல்வி, செல்வம் யாவும் கிட்டும், நோய் நீக்கம், அகால மரண பயமின்மை என எல்லா நற்பலன்களையும் கார்த்திகை சோமவார விரதம் தரும்.

இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள், அன்றைய தினம் முழுவதும் உபவாசம் இருப்பது நல்லது. அப்படி இருக்க முடியாதவர்கள் ஒரு பொழுது மட்டும் சாப்பிட்டு விரதத்தைக் கடைப்பிடிக்கலாம். இந்த விரதத்தை வாழ்நாள் முழுவதுமோ அல்லது 12 ஆண்டுகளோ கடைப்பிடிக்கலாம். அதுவும் இயலாதவர்கள் கார்த்திகை மாதத்தில் வரும் திங்கட்கிழமைகளிலாவது இந்த விரதத்தை அனுசிடிப்பது நலம் தரும்.

ஆண்களும் இந்த விரதத்தை அனுசிடிக்கலாம். திருமணமாகாதவர்கள் நல்ல கணவன் வேண்டியும், திருமணமானவர்கள் கணவன் நோயில்லாமல் நீண்ட காலம் வாழவும் இந்த விரதத்தைக் கடைப்பிடிக்கலாம்.




- இறைவன் நம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எட்டாதவன். முடிவில்லாத பெருமையைக் கொண்டவன். மனம், வாக்கு, காயத்தால் அறிய இயலாதவன். அவனே நமக்கு அருள் செய்வதற்காக தன்னைக் குறைத்துக் கொள்கிறான்.

- வாய்மை, நீதி தவறாத முறையில் உணவைத் தேடுதல், இறைவனின் பெயரால் தானம் செய்தல், மனத்தூய்மைக்கு முயற்சித்தல், கடவுளை வணங்குதல் ஆகிய ஐந்திற்காகவும் கடவுளை நாளும் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

# மகாவிசுணுவும், சனி பகவானும் நிகழ்த்திய திருவிளையாடல்.


ஒரு சமயம் தன் அலுவல்களைக் கவனிக்கப் வேகமாக புறப்பட்ட சனிபகவானை, இடையில் வந்து தடுத்து நின்றார் விசுணு பகவான். சனியின் பார்வை தெய்வத்திடம் பலிக்காது என்பதால் நேராக நின்ற பெருமாளிடம், “ஐயனே! என்னைத் தடுத்து நிறுத்தும் காரணம் என்ன?” என்று கேட்டார். “நீ யாரைப் பிடிப்பதற்காக இவ்வளவு அவசரமாகச் சென்று கொண்டிருக்கிறாய் என்பதை தெரிந்து கொள்ளலாமா?” என்று கேட்டார் மகா விசுணு.

புன்னகையுடன் வினவிய பெருமாளைப் பார்த்த சனி “உமக்குத் தெரியாததைப் போன்று கேட்கலாமா? நீங்கள் இங்கு என்னைப் போக விடாமல் தடுக்கும் காரணமும் அதுவே அல்லவா? இருந்தாலும் கூறுகிறேன். உம்முடைய தீவிர விசுவாசியும் பக்தனுமாகிய ராதாகிருஷ்ணன் எனும் ஆலயத்திருப்பணி செய்யும் மனிதரைப் பிடிக்கும் காலம் இது. அதற்காகவே செல்கிறேன்” என்று பதிலளித்தார். உடனே பெருமாள், “அதைப்பற்றி பேசவே உன்னைத் தடுத்து நிறுத்தினேன்.

அவன் மனிதரில் மாணிக்கம். என் மேல் உள்ள பக்தியால் பார்ப்பவரிடம் எல்லாம், என் பெருமைகளை எடுத்துக் கூறி பக்தி மார்க்கத்தை வளர்த்து வருகிறான். மேலும் நான் குடியிருக்கும் பழுதடைந்த ஆலயங்களை எல்லாம் பிறரிடம் கையேந்தி கொடைகள் பெற்று, புதுப்பித்து திருப்பணிகள் செய்து வருகிறான். நீ அவனைத் துன்பப் படுத்துவதை எப்படி என் மனம் பொறுக்கும்?” என்றார்.

ஆனால், சனி கடமையில் சுத்தமானவன் அல்லவா? “பெருமாளே! அந்த ஈசனே சொன்னாலும் என் கடமைதான் எனக்கு முக்கியம். ஆனாலும் உங்கள் மனம் கவர்ந்த பக்தனுக்காக நீங்கள் கவலைப்படுவதை என்னால் பார்க்க முடியவில்லை. ஆகவே ஏழரை வருடங்களுக்குப் பதில் ஏழரை மாதங்கள் அவனைப் பிடித்துக் கொள்கிறேன்” என்று கூறினார்.

பெருமாளோ, “இல்லை.. இல்லை.. அவ்வளவு கஷ்டங்களை அவன் தாங்க மாட்டான். ஒரு ஏழரை நாழிகை மட்டும் அவனைப் பிடித்து உன் கடமையை ஆற்று” என கேட்க, சனிக்கு பெரும் மகிழ்ச்சி. “நல்லது.. ஏழரை நாழிகையில் அவனைப் படுத்தும் பாட்டைக் காணத் தயாராக இருங்கள். வருகிறேன்” என்று சொல்லி அங்கிருந்து புறப்பட்டார் சனி.



பெருமூச்சு விட்ட பெருமாளும், நடப்பதைக் காணும் ஆவலில் பூலோகம் வந்தார். அங்கு கடமையே என்று விசுணு சுலோகங்கள் சொல்லி, காலை வழிபாட்டை முடித்த ராதாகிருட்டிணன் புதியதாக கட்டத் தொடங்கி இருக்கும் ஆலயத்தின் கணக்குகளை பார்க்கத் தொடங்கினார். இதுதான் சமயமென்று அவரைப் பிடித்தார் சனீசுவரன். அப்போது அங்கு வந்த இருவர் நன்கொடை என்று சொல்லி ஒரு மூட்டையை அவரிடம் தந்து வணங்கி விட்டு அவசரமாக சென்றனர்.

அதை அப்புறம் பிரிக்கலாம் என்றெண்ணி, மீண்டும் கணக்குகளை பார்க்கத் தொடங்கியவரை மீண்டும் அழைத்தது ஒரு குரல். நிமிர்ந்து பார்த்தவரை என்னவென்று கேள்வி எழுப்பக்கூட அனுமதிக்காமல், அடித்து துவைத்து அரசவைக்கு இழுத்துச் சென்று, அரசன் முன் நிறுத்தினான் ஒரு காவலாளி.

அங்கு இருந்த பணக்கார சீமாட்டி, “இதோ.. இவர்தான் கடைசியாக கோவிலுக்கு நன்கொடை என்று என் இல்லத்திற்கு வந்தவர். இவர்தான் அந்த நகைகளை எடுத்திருக்க வேண்டும்” என்று குற்றம் சாட்டினாள்.

ராதா கிருட்டிணன் பதறினார். “ஐயோ! என்ன இது. நான் எதற்கு உங்கள் நகைகளை எடுக்கிறேன். பகவான் புண்ணியத்தில் மூன்று வேளை உணவுடன், இருக்க ஆலயம், உடுக்க காவித் துணி உள்ளது. எனக்கு எதற்கு உங்கள் நகை. நான் குற்றமற்றவன்.” ஆனால் ராதா கிருட்டிணன் இருந்த இடத்தில் இருந்து, காவலாளி கொண்டு வந்திருந்த மூட்டை, அந்தப் பெண்மணியின் குற்றச்சாட்டை நிரூபிப்பதாக இருந்தது. அதற்குள் அந்தப் பெண்மணியின் நகைகள் இருந்தன.

சனீசுவரனின் விளையாட்டு தொடங்கி விட்டது.. நகைகளைத் திருடிய குற்றத்திற்காக ராதா கிருட்டிணனுக்கு சவுக்கடிகளும் சாணிக்கரைசலும் பொதுமக்கள் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டது. ஊர் மக்கள் அவரைத் தூற்றினர். மனம் ஒடிந்த அந்த விசுணு பக்தர்கள் ஆலய திருக்குளம் முன்பாக நின்றார்.

“பெருமாளே! என் நினைவு தெரிந்த நாள் முதல் உன்னைத்தவிர வேறொன்றும் என் சிந்தையில் நிறுத்தியதில்லை. இந்தப் பழியையும் நீ எனக்குத் தந்த பரிசாகவே நினைக்கிறன். ஆனாலும் பழியோடு வாழ்வதை விட உன் காலடியில் சேர்கிறேன்” என்றபடி குளத்தில் மூழ்கி இறக்கப் போனார்.

அப்போது ஒரு அசரீரி அவரை தடுத்து நிறுத்தியது. ‘நான் சனீஸ்வரன்! உங்களின் இந்த துயரத்துக்கு நானே காரணம். பெருமாள் மீதான உங்களின் பக்தியால் பெருமாளின் வேண்டுகோளை ஏற்று வெறும் ஏழரை நாழிகை மட்டுமே, இத்துன்பங்களை நீங்கள் அனுபவிக்க நேர்ந்தது. இனி உங்கள் மேல் உள்ள பழிச்சொல் நீங்கும்.”

அந்த நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தனர், அரசரும், பணக்கார பெண்மணியும். சற்று முன்புதான் நகையைத் திருடிய உண்மையான திருடர்கள் பிடிப்பட்டதாகவும், அவர்கள் தான் நகையை வைத்திருந்தால் மாட்டிக் கொள்வோம் என ராதா கிருட்டிணனிடம் நன்கொடையாக அளித்ததை ஒப்புக்கொண்டதையும் தெரிவித்தனர். இருவரும் அந்த பக்தரிடம் மன்னிப்பும் கோரினர். ஊர் மக்களுக்கு விசயம் தெரிந்து அனைவரும் விசுணு பக்தரை மரியாதையோடு வரவேற்றனர்.




Rheinische Str.79-44137-Dortmund
tksbestfoods
0049 231 950 468 83
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de